இயல் 3

# சுற்றத்தார் கண்ணே உள

பண்பாடு



பழங்குடியினரின் சமூக வாழ்க்கை ஓவியம், நீலகிரி.

## கற்றல் நோக்கங்கள்

- தமிழர் குடும்ப உறவுமுறைகளை அறிந்து, அவற்றைப் போற்றும் பண்பினைப் பெறுதல்.
- வாழ்வின் இன்ப துன்பங்களைப் பாடமாக ஏற்கும் பக்குவங்களைக் கவிதையாகப் படைக்கும் திறன் பெறுதல்.
- தமிழர்க்கே உரிய பண்பாட்டுக்கூறுகளைக் காப்பியம்வழிப் படித்துணர்ந்து பின்பற்றுதல்.
- நிலத்தோடு ஒன்றிய எளிய மக்களின் உணர்வுகளைக் கதைகளில் படித்துக் கருத்துரைத்தல்.
- சூழலுக்கேற்பச் சொல்லையும் பொருளையும் தொடரையும் பொருத்தமாகப் பயன்படுத்தும் திறன் அடைதல்.

## பாடப்பகுதிகள்

- **தமிழர் குடும்ப முறை** – பக்தவத்சல பாரதி
- **விருந்தினர் இல்லம்** – ஜலாலுத்தீன் ரூமி
- **கம்பராமாயணம்** – கம்பர்
- **உரிமைத்தாகம்** – பூமணி
- **பொருள் மயக்கம்**
- **திருக்குறள்** – திருவள்ளுவர்



XII Std Tamil Chap_03.indd 47 10-01-2020 12:44:11

உரைநடை உலகம்

பண்பாடு ௩

# தமிழர் குடும்ப முறை

ALTKME

– பக்தவத்சல பாரதி

**நுழையும்முன்**

குடும்பம் என்ற அமைப்பு ஏற்படப் பன்னெடுங்காலம் ஆகியிருக்கலாம். இந்த உயரமைப்பின் மூலமே உலகச்சமூகம் இயங்குகிறது. சங்க காலத்தில் குடும்ப அமைப்பு மேலோங்கிய ஒன்றாக இருந்தது. அதன் தொடர்ச்சி இன்றுவரை இருக்கிறது. தொன்மைக் காலத்திலேயே மேம்பட்ட குடும்ப அமைப்பை உருவாக்கியிருந்த தமிழ்ப் பண்பாட்டின் செழுமை, சங்க இலக்கியங்கள் வாயிலாக வெளிப்படுகிறது.

குடும்பம் எனும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் எனும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது; குடும்பம் தொடங்கிக் குலம், கூட்டம், பெருங்குழு, சமூகம் என்ற அமைப்புவரை விரிவு பெறுகிறது. ஆதலின், குடும்பமே மனித சமூகத்தின் அடிப்படை அலகாக உள்ளது. வாழுங்காலம் முழுவதும் தொடர்ந்து வேறு எந்த நிறுவனமும் இந்த அளவுக்கு மனிதனைச் சமூகவயப்படுத்தும் பணியைச் செய்ததில்லை.

## குடும்பம்

குடும்ப அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படை, திருமணமே. குடும்பம், திருமணம் இரண்டும் ஒன்றையொன்று சார்ந்தே செயல்படுகின்றன – நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போல. இன்று நாம் வழங்கும் 'திருமணம்', 'குடும்பம்' ஆகிய இரண்டு சொற்களுமே தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் இடம்பெறவில்லை. குடும்பம் எனும் சொல் முதன்முதலில் திருக்குறளில்தான் (1029) பயின்று வருகிறது.

சங்க இலக்கியத்தில் 'குடம்பை', 'குடும்பு', 'கடும்பு' ஆகிய சொற்கள் குடும்ப அமைப்போடு தொடர்புடையவை. 'குடம்பை' என்ற சொல், இருபது இடங்களில் பயின்று வருகிறது. 'குடும்பு' எனும் சொல் கூடி வாழுதல் என்று பொருள்படுகின்றது.

குடும்பு எனும் சொல்லுடன் 'அம்' விகுதி சேர்த்துப் பொருண்மை விரிவாக்கமாக (Semantic extension) 'குடும்பம்' எனும் சொல் அமைந்தது. பண்டைத் தமிழர்கள் குடும்பம் எனும் அமைப்புடன் வாழ்ந்த இடங்கள் பற்றிப் பல குறிப்புகள் நமக்குக் கிடைக்கின்றன.

*"இரவுக் குறியே இல்லகத் துள்ளும்*
*மனையோர் கிளவி கேட்கும் வழியதுவே*
*மனையகம் புகாஅக் காலை யான"*
*(பொருளியல்–129)*

எனும் தொல்காப்பிய நூற்பா, 'இல்', 'மனை' ஆகிய இரண்டு வாழிடங்களைக் குறிப்பிடுகின்றது.

## வாழிடம்

சங்க இலக்கியத்தில் மேலும் பல சொற்கள் உள்ளன. இல், மனை, குரம்பை, புலப்பில், முன்றில், குடில், கூரை, வரைப்பு, முற்றம், நகர், மாடம் முதலிய சொற்கள் குடும்பங்களின் வாழ்விடங்களில் உள்ள வேறுபாடுகளைச் சுட்டுகின்றன. மருதத்திணைப் பாடல் ஒன்றில் மகளிர் 'தம்மனை', 'நும்மனை' (அகம். 346: 16–17) என மனைவியின் இல்லத்தையும் கணவனின் இல்லத்தையும் பிரித்துப் பேசும் போக்கினைக் காண முடிகிறது. இன்னும் சில இடங்களில் தற்காலிகத் தங்குமிடம் 'புக்கில்' (புறம் 221–6) எனவும், திருமணத்திற்குப்பின் கணவனும்



XII Std Tamil Chap_03.indd 48 10-01-2020 12:44:11

மனைவியும் பெற்றோரிடமிருந்து பிரிந்து, தனியாக வாழுமிடம் 'தன்மனை' (neolocal) எனவும் வழங்கப்பெற்றுள்ளன.

'மனை' எனும் சொல் 'நம்மனை', 'தம்மனை', 'எம்மனை', 'இம்மனை', 'உம்மனை', 'நின்மனை', 'நுந்தைமனை', 'நன்மனை', 'வறுமனை', 'வளமனை', 'கடிமனை', 'தாய்மனை' எனச் சங்க இலக்கியங்களில் பல இடங்களில் பயின்று வருகின்றது. 'மனையோள்' எனும் சொல்லும் சங்கப்பாடல்களில் பயின்றுவரும் சொல்லாகும். இதன்மூலம் மனை என்பது வாழிடத்தைக் குறிக்கும் முதன்மைச் சொல்லாக உள்ளதை அறியலாம்.

### மணந்தகம்

உயிரிகளைப்போன்றே குடும்பமும் தோன்றுகிறது; வளர்கிறது; பல கட்டங்களைக் கடக்கிறது. அதன் வாழ்க்கைச்சுழற்சியில் பல வடிவங்களில் நிலைமாற்றம் பெறுகிறது. இத்தகைய நீண்ட பாதையில் குடும்பத்தின் தொடக்கம் திருமணமே. மணம்புரிந்த கணவனும் மனைவியும் சேர்ந்து இல்லற வாழ்வில் ஈடுபடக்கூடிய தொடக்கக் கட்டமே 'மணந்தகம்' (Family of procreation) எனப்படுகிறது. முதல் குழந்தை பிறக்கும்வரை உள்ள காலகட்டத்தை இந்நிலை குறிக்கிறது. தனிக்குடும்ப உருவாக்கத்தின் தொடக்க நிலையாக இது அமைகிறது.

இளந்தம்பதியினருக்கு ஏற்ற அறிவுரை கூறி நெறிப்படுத்தும் பணி செவிலிக்குரியது என்று கூறும் தொல்காப்பிய அடிகள்மூலம்



(தொல். பொருள். 151) மணந்தகம் எனும் குடும்ப அமைப்பு முதன்மை பெற்றிருந்ததை அறிய முடிகிறது.

### தாய்வழிக் குடும்பம்

சங்ககாலத்தில் கண சமூகத்துக்குத் தாயே தலைமை ஏற்றிருந்தாள். தாய்வழியாகவே குலத்தொடர்ச்சி குறிக்கப்பட்டது. பதிற்றுப்பத்து கூறும் சேரநாட்டு மருமக்கள் தாய முறை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

*சிறுவர்தாயே பேரிற் பெண்டே (புறம். 270)*

*செம்முது பெண்டின் காதலஞ்சிறா அன் (புறம். 276)*

*வானரைக் கூந்தல் முதியோள் சிறுவன் (புறம். 277)*

*முளரிமருங்கின் முதியோள் சிறுவன் (புறம். 278)*

*என்மகள் ஒருத்தியும் பிறள்மகன் ஒருவனும்*
*(கலி. பாலை. 8)*

முதலான தொடர்களில் 'இவளது மகன்' என்றே கூறப்பட்டது. இவனது மகன் எனக் கூறப்படவில்லை என்பது நோக்கத்தக்கது. இவை அனைத்தும் சங்ககாலத்தில் காணப்பட்ட தாய்வழிச் சமூகத்தின் நிலையைக் காட்டுகின்றன.

சங்ககாலத்தில் பெண் திருமணம் செய்த பின்னரும் தன் இல்லத்திலேயே தொடர்ந்து வாழ்க்கை நடத்தும் தாய முறை (Matrilocal) இருந்துள்ளது. திருமணத்திற்குப்பின் மனைவியின் இல்லத்துக்குச் சென்று கணவன் வாழ்வதே நடைமுறையாக இருந்துள்ளது (அகம் 24:10, 274:14, 284:13).

தாய்வழிக் குடும்பங்களில் பெண்களே குலத்தொடர்ச்சிக்கு உரியவர்களாக இருப்பதால் பெண்குழந்தைகளின் பேறு முதன்மையாக விரும்பப்பட்டது. **தாய்வழி முறையில் குடும்பத்தின் சொத்தும் வளங்களும் செல்வங்களும் பெண்களுக்குச் சென்று சேர்ந்தன.** தாய்வழிச் சொத்துகள் பெண்டிருக்கே போய்ச் சேர்ந்தன என்பதை ஒரு மருதத்திணைப் பாடல் (குறுந். 295) தெளிவாகவும் விளக்கமாகவும் கூறுகிறது.



### தந்தைவழிக் குடும்பம்

மனித குலத்தில் ஆதியில் தோன்றி வளர்ந்த தாய்வழி முறையானது தமிழர்களிடம் இருந்ததைச் சங்க இலக்கியங்களின்வழி அறிய முடிந்தாலும், சங்க காலத்திலேயே ஆண் மையச் சமூக முறை வலுவாக வேர் ஊன்றிப் பரவலாகிவிட்டதையும் காணமுடிகிறது.

ஆண் மையச் சமூகத்தில் பெண் திருமணத்திற்குப் பின் தன் கணவனுடைய தந்தையகத்தில் (patrilocal) வாழ வேண்டும். மணமான பின் தலைவன் தலைவியை அவனுடைய இல்லத்திற்கு அழைத்து வந்தபோது அவனுடைய தாய் அவளுக்குச் சிலம்புகழி நோன்பு செய்திருக்கிறாள்.

***நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும்
எம்மனை வதுவை நல்மணம் கழிக***
*(ஐங்குறு. 399: 1–2)*

இதன்வழி மணமக்களின் வாழ்விடம் கணவன் அகம் என்பதை உறுதிப்படுத்தலாம். மேலும், "மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே" (குறுந். 135) என்னும் குறுந்தொகைப் பாடல் மூலம் பெண் தன் கணவனையே முழுவதும் சார்ந்திருந்த நிலையை அறிய முடிகிறது. சங்ககாலத்தில் தந்தைவழிக் குடும்பமுறை மிகவும் வலுவான, ஒரு பரவலான முறையாக இருந்துள்ளதைப் பொருள்வயிற் பிரிவு, போர், வாழ்வியல் சடங்குகள், குடும்பம், திருமணம் எனப் பல்வேறு சமூகக் களங்களில் காண இயலும்.

### தனிக்குடும்பம்

தனிக்குடும்பம் (nuclear family) தோன்றுவதற்கான தொடக்கநிலைக் குடும்பங்கள்பற்றிச் சங்க இலக்கியங்கள் மிகுதியாகப் பேசியிருக்கின்றன. இளமகவுநிலைக் குடும்பங்களின் காட்சிகளை ஐங்குறுநூறு தெளிவுபடுத்துகிறது (408). "மறியிடைப் படுத்த மான்பிணை போல்" மகனை நடுவணாகக்கொண்டு தலைவனும் தலைவியும் வாழ்ந்திருக்கின்றனர் (ஐங்குறுநூறு 401).

தாய், தந்தை, குழந்தை மூவருமுள்ள தனிக்குடும்பம் மிகவும் நெருக்கமானது என்பதால் இது தொடக்கநிலை / எளிய / நெருக்கமான குடும்பம் (Elementary / Simple / Immediate family) எனப்படும்.

தனிக்குடும்ப வகை, சமூகப் படிமலர்ச்சியில் இறுதியாக ஏற்பட்ட ஒன்று. இஃது இன்றைய தொழிற்சமூகத்தில் பெரும்பான்மையாகக் காணப்படுகிறது என்பது ஒரு வாதம். ஆனால் பல ஆதிக்குடிகளிடம் தனிக்குடும்ப முறை முக்கியமான குடும்ப முறையாக இருப்பதையும் இனவரைவியல் ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. இஃது ஒரு தொல்வடிவமாகவே இருந்து வருகிறது என்பது இன்னொரு வாதமாகும்.



XII Std Tamil Chap_03.indd 50 10-01-2020 12:44:14

## விரிந்த குடும்பம்


சங்க காலத்தில் தனிக்குடும்ப அமைப்பு விரிவுபெற்று இவர்களுடன் பெற்றோர் ஒருவரின் தந்தையும் உடன் வாழும் "விரிந்த குடும்ப" (extended family) முறையையும் காண முடிகிறது. கணவன், மனைவி, மகன் ஆகியோருடன் தந்தை சேர்ந்து வாழ்ந்த நேர்வழி விரிந்த குடும்ப (lineally extended family) முறையை ஒக்கூர் மாசாத்தியாரின் புறநானூற்றுப் பாடல் (279) கூறுகிறது.

சங்ககாலக் குடும்ப அமைப்பில் முதல்நிலை உறவினர்களை மட்டும் ஓரளவு இனம் காண முடிகிறது. நற்றாய் (பெற்ற தாய்) ஒருபுறம் இருந்தாலும் செவிலித்தாயும் அவளது மகளாகிய தோழியும் குடும்ப அமைப்பில் முதன்மைப் பங்கு பெறுகின்றனர். சமூகத் தாயாக விளங்கிய செவிலித்தாய் முறை பண்டைய இனக்குழு மரபின் மாறுபட்ட தொடர்ச்சியாகச் சங்ககாலத்தில் வருவதை அறிய முடிகிறது. சங்க காலத்தில் ஒவ்வொரு ஆயத்துக்கும் செவிலித்தாயே பொறுப்பேற்றிருந்தாள்.

இல்லற வாழ்வின் இறுதிக் காலத்தில் பெருமைகள் நிறைந்த மக்களுடன் நிறைந்து, அறத்தினை விரும்பிய சுற்றத்தோடு சேர்ந்து, தலைவனும் தலைவியும் மனையறம் காத்தலே இல்வாழ்வின் பயனாகும் எனச் சங்ககால மக்கள் எண்ணினார்கள். விரிந்த குடும்பம் பற்றிய இக்கருத்தினைத் தொல்காப்பியமும் பதிவு செய்கிறது.

சங்கச் சமூகம் குடும்பம் என்ற அமைப்பை அடிப்படை அலகாகக் கொண்டிருந்த நிலையைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. அதன் தொடர்ச்சியாகவே இன்றைய சமூக அமைப்பும் கூட்டுக்குடும்பம், தனிக்குடும்பம் என்ற அலகுகளைக் கொண்டதாகவும் தந்தைவழிக் குடும்ப அமைப்பைக் கொண்டதாகவும் இருக்கிறது. தொன்மைமிக்க இக்குடும்ப அமைப்பு முறை தமிழ்ச் சமூகத்தின் அடையாளப் பெருமிதமாகும்.

### தெரிந்து தெளிவோம்




### நூல்வெளி

இப்பாடப்பகுதி, பனுவல் (தொகுதி II, 2010) காலாண்டிதழில் வெளிவந்த கட்டுரையின் சுருக்கம். இதை எழுதியவர் பக்தவத்சல பாரதி. தமிழ்ச்சமூகம், பண்பாடு சார்ந்த மானிடவியல் ஆய்வுகளை இவர் முன்னெடுத்து வருகிறார். பழங்குடிகள், நாடோடிகள் உள்ளிட்ட விளிம்புநிலைச் சமூகங்கள் பற்றிய ஆய்வில் இவருடைய பங்களிப்பு முக்கியமானது. இலக்கிய மானிடவியல், பண்பாட்டு மானிடவியல், தமிழர் மானிடவியல், தமிழகப் பழங்குடிகள், பாணர் இனவரைவியல், தமிழர் உணவு உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.

### கற்பவை கற்றபின்...

1. கூட்டுக்குடும்பம் – தனிக்குடும்பம் குறித்த உங்களது கருத்துகளைத் தொகுத்து உரை நிகழ்த்துக.
2. குடும்ப உறுப்பினர்களின் உறவுமுறைப் பெயர்களை அட்டவணைப்படுத்தி எழுதுக.

கவிதைப்பேழை

பண்பாடு ௩

# விருந்தினர் இல்லம்

– ஜலாலுத்தீன் ரூமி

## நுழையும்முன்

இன்பம் துன்பம், வேண்டியது வேண்டாதது எல்லாமே நாம் விரும்பியும் விரும்பாமலும் நம்மை வந்தடைகின்றன. அவற்றை வேறுபடுத்தாமல் ஏற்றுக்கொண்டு அவற்றிலிருந்து வேண்டியதைக் கற்றுக்கொள்வதே நன்று. எல்லாவற்றிலிருந்தும் நல்லவற்றைக் கற்றுக்கொள்ளும் பண்பாடு வளர வேண்டும். எந்த மொழியில் இருந்தாலும் நல்ல இலக்கியங்கள் இப்பண்பாட்டை வலியுறுத்துகின்றன.

*இந்த மனித இருப்பு*
*ஒரு விருந்தினர் இல்லம்.*
*ஒவ்வொரு காலையும் ஒரு புதுவரவு.*

*ஓர் ஆனந்தம்*
*சற்று மனச்சோர்வு*
*சிறிது அற்பத்தனம்*
*நொடிப்பொழுதேயான விழிப்புணர்வு–*
*எதிர்பாராத விருந்தாளிகளாக*
*அவ்வப்போது வந்துசெல்லும்.*

*எல்லாவற்றையும் வரவேற்று விருந்தோம்பு!*
*துக்கங்களின் கூட்டமாக அவை*
*இருந்து உனது வீட்டைத் துப்புரவாக*
*வெறுமைப்படுத்தும் போதும்,*
*ஒவ்வொரு விருந்தினரையும்*
*கௌரவமாக நடத்து.*
*புதியதோர் உவகைக்காக*
*அவை உன்னை*
*தூசிதட்டித் தயார்படுத்தக்கூடும்.*

*வக்கிரம்*
*அவமானம்*
*வஞ்சனை*
*இவற்றை வாயிலுக்கே சென்று*
*இன்முகத்துடன்*
*வரவேற்பாயாக.*

*வருபவர் எவராயினும்*
*நன்றி செலுத்து.*
*ஏனெனில் ஒவ்வொருவரும்*
*ஒரு வழிகாட்டியாக*
*அனுப்பப்படுகிறார்கள்.*
*தொலைதூரத்திற்கு*
*அப்பாலிருந்து.*



### நூல்வெளி

ஜலாலுத்தீன் ரூமியின் கவிதைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலவற்றை ஆங்கிலத்தில் அழகாக மொழியாக்கம் செய்தவர் கோல்மன் பார்க்ஸ். அதனைத் தமிழில் 'தாகங்கொண்ட மீனொன்று' என்ற தலைப்பில் என். சத்தியமூர்த்தி மொழிபெயர்த்துள்ளார். அத்தொகுப்பிலுள்ள கவிதையொன்று பாடப்பகுதியாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஜலாலுத்தீன் ரூமி (இன்றைய) ஆப்கானிஸ்தான் நாட்டில், கி.பி. (பொ.ஆ.) 1207ஆம் ஆண்டில் பிறந்தார். பாரசீகத்தின் மிகச் சிறந்த கவிஞர்களில் ஒருவர். இவரது சூஃபி தத்துவப் படைப்பான 'மஸ்னவி' (Masnavi) 25,600 பாடல்களைக் கொண்டதாகச் சொல்லப்படுகிறது. மஸ்னவி என்பது ஆழமான ஆன்மீகக் கருத்துகள் நிரம்பிய இசைக்கவிதைகளின் தொகுப்பு. இவரின் புகழ்பெற்ற மற்றொரு நூல், 'திவான்–ஈ–ஷம்ஸ்–ஈ–தப்ரீஸி' (Collective Poems of Shams of Tabriz) என்பதாகும்.

### கற்பவை கற்றபின்...

தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட கவிதைகளில் உங்கள் மனம் கவர்ந்த சிலவற்றை வகுப்பறையில் படித்துக்காட்டுக.



XII Std Tamil Chap_03.indd 52 10-01-2020 12:44:16

கவிதைப்பேழை


பண்பாடு ௩

# கம்பராமாயணம்

BW59PQ

**நுழையும்முன்**

'யாவரும் கேளிர்' என்பது தமிழர் நற்பண்பின் வளர்ச்சி; 'சிறியோரை இகழ்தல் இலமே' என்பது அந்நற்பண்பின் மலர்ச்சி; 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்பது அவ்வுயிர்ப்பண்பின் முதிர்ச்சி; காக்கை குருவி எங்கள் ஜாதி என்பது அத்தமிழ்ப்பண்பின் தொடர்ச்சி. கம்பனின் காவியம் இராமனை இப்பண்பின் படிமமாகப் படைத்திருப்பது உயர்ச்சி. தந்தை தாய் மீதான அன்பு, உடன் பிறப்பியம் ஆகியவற்றை, எல்லைகள் அனைத்தையும் கடந்து இராமன் விரிவுபடுத்துகிறான். வேடன், பறவை, எளிய முதியவள், வானரம், எதிரியின் தம்பி என்ற வேலிகள் அவன் அன்பிற்கு இல்லை.



## அயோத்தியா காண்டம் - குகப் படலம்

### குகன்

வேடுவர் தலைவன் குகன். பாறை உடலுக்குள் பஞ்சு உள்ளம் கொண்டவன் அவன். காட்டிற்குச் செல்லும் இராமன், கங்கையைக் கடக்க அவன் உதவுகிறான். அன்பிற்கு அடைக்கும் தாழ் இல்லை என்பதை நிறுவும் வகையில் இராமன் குகன் நட்பு முகிழ்க்கிறது. இராமன் இளவரசனாக இருப்பினும் வேடனான குகனை உடன்பிறப்பாக ஏற்றுக் கொள்கிறான். பின்னாளில் அவனைச் சந்திக்கும் பரதனும் "எனக்கும் மூத்தோன்" எனக் குகனை ஏற்கிறான்.

1. *அன்னவன் உரை கேளா*
   *அமலனும் உரை நேர்வான்*
   *என்உயிர் அனையாய் நீ*
   *இளவல் உன் இளையான்; இந்*
   *நன்னுதலவள் நின் கேள்;*
   *நளிர் கடல் நிலம் எல்லாம்*
   *உன்னுடையது; நான் உன் தொழில்*
   *உரிமையின் உள்ளேன். (1994)*



XII Std Tamil Chap_03.indd 53 10-01-2020 12:44:17

## சொல்லும் பொருளும்

**அமலன்** – இராமன்; **இளவல்** – தம்பி; **நளிர்கடல்** – குளிர்ந்தகடல்

## பொருள்

குகன் கூறியவற்றைக் கேட்ட இராமன் "என் உயிர் போன்றவனே! நீ என் தம்பி; இலக்குவன் உன் தம்பி; அழகிய நெற்றியைக் கொண்ட சீதை, உன் அண்ணி; குளிர் கடலும் இந்நிலமும் எல்லாம் உனதேயாகும். நான் உன்னுடைய ஏவலுக்கேற்பப் பணிபுரிபவன்" என்று கூறினான்.

2. *'துன்பு உளதுஎனின் அன்றோ*
*சுகம் உளது? அது அன்றிப்*
*பின்பு உளது; இடை மன்னும்*
*பிரிவு உளது என உன்னேல்;*
*முன்பு உளெம் ஒரு நால்வேம்*
*முடிவு உளது என உன்னா*
*அன்பு உள, இனி, நாம் ஓர்*
*ஐவர்கள் உளர் ஆனோம்* (1995)*

## சொல்லும் பொருளும்

**துன்பு** – துன்பம்; **உன்னேல்** – எண்ணாதே

## பா வகை : கலி விருத்தம்

## பொருள்

இராமன் காட்டிற்குச் சென்று துன்புறுவானே என்று குகன் வருந்தினான். அதை உணர்ந்த இராமன் கூறுகிறான், குகனே! துன்பம் என்று ஒன்று இருந்தால்தானே இன்பம் என்பது புலப்படும். துன்பத்திற்குப் பின் இன்பம் உறுதியாக உண்டு. நமக்கிடையே இப்போது இப்பிரிவு நேர்கிறது என்று எண்ணாதே. இதுவரை நாங்கள் நால்வரே உடன்பிறந்தவர் என்றிருந்தோம். உறவு என்பது எங்கள் நால்வரோடு நின்றுவிடவில்லை. இப்போது உன்னையும் சேர்த்து நாம் ஐவர் ஆகின்றோம்.

## ஆரணியகாண்டம் – சடாயு உயிர் நீத்த படலம்

### சடாயு

இராவணன் சீதையைச் சிறையெடுத்தபோது கழுகு வேந்தன் சடாயு தடுத்துச் சண்டையிட்டுக் காயப்படுகிறான். இராமனிடம் நடந்ததைக் கூறுகிறான்; பின் இறந்துவிடுகிறான். இராமன், தன் தந்தையின் நண்பனான அக்கழுகு வேந்தனையும் தன் தந்தையாகவே கருதி, மகன் நிலையில் அவனுக்குரிய இறுதிச் சடங்குகளைச் செய்கிறான்.

3. *இந்தனம் எனைய என்ன கார்*
*அகில் ஈட்டத்தோடும்*
*சந்தனம் குவித்து வேண்டும்*
*தருப்பையும் திருத்தி, பூவும்*
*சிந்தினன் மணலின் வேதி*
*தீது அற இயற்றி, தெண் நீர்*
*தந்தனன் தாதை தன்னைத் தடக்*
*கையான் எடுத்துச் சார்வான். ( 3356)*

## பொருள்

"எப்படிப்பட்ட சிறப்பான விறகுகள் இவை" என்று கண்டவர் வியக்கும்படியான கரிய அகில் கட்டைகளையும் சந்தனக் கட்டைகளையும் இராமன் கொண்டுவந்து வைத்தான். தேவையான அளவு தருப்பைப் புற்களையும் ஒழுங்குபட அடுக்கினான். பூக்களையும் கொண்டுவந்து தூவினான். மணலினால் மேடையைத் திருத்தமாக அமைத்தான். நன்னீரையும் எடுத்து வந்தான். இறுதிச்சடங்கு செய்யப்படக்கூடிய மேடைக்குத் தன் தந்தையாகிய சடாயுவைப் பெரிய கைகளில் தூக்கிக் கொண்டு வந்தான்.

## ஆரணிய காண்டம் – சவரி பிறப்பு நீங்கு படலம்

### சவரி

இராமனிடம் மிகுதியான அன்பையும் பக்தியையும்கொண்டவள் சவரி. சீதையைத்தேடிவரும் இராமனை, சுக்ரீவனுடன் நட்புக்கொள்ளுமாறு செய்தவள் இவள். அவ்வகையில் காப்பியத்தின் போக்கில் ஒரு திருப்பத்தை உருவாக்குபவள் சவரி. இராமன், அன்பளாகிய சவரியிடம் தாயிடம் காட்டும் அன்பைக் காட்டினான்.

4. *அன்னது ஆம் இருக்கை நண்ணி,*
*ஆண்டுநின்று, அளவு இல் காலம்*
*தன்னையே நினைந்து நோற்கும் சவரியைத்*
*தலைப்பட்டு, அன்னாட்கு*
*இன்னுரை அருளி, தீது இன்று*
*இருந்தனை போலும் என்றான்*
*முன் இவற்கு இது என்று எண்ணல் ஆவது*
*ஓர் மூலம் இல்லான். ( 3700)*



XII Std Tamil Chap_03.indd 54 10-01-2020 12:44:17

### பொருள்

இவனுக்கு முன்னே இப்படியொருவர் இருந்தார் என்று பிறிதொருவரைக் காட்ட இயலாத நிலையிலுள்ள முதற்பொருளாகிய இராமன், சவரியிடம் இனிதாகப் பேசினான். தன்னையே நினைத்துத் தவமிருந்த சவரியிடம், "இவ்வளவு காலம் நீ துன்பம் ஏதுமின்றி நலமுடன் இருந்தாய் அல்லவா?" என்று பரிவுடன் கேட்டான்.

5. ***ஆண்டு, அவள் அன்பின் ஏத்தி,***
***அழுது இழி அருவிக் கண்ணள்,***
***மாண்டது என் மாயப் பாசம்;***
***வந்தது, வரம்பு இல் காலம்***
***பூண்ட மா தவத்தின் செல்வம்;***
***போயது, பிறவி, என்பாள்***
***வேண்டிய கொணர்ந்து நல்க.***
***விருந்து செய்து இருந்த வேலை (3701)***

### பொருள்

அப்போது சவரி, இராமனைப் புகழ்ந்து அன்பின் கனிவினால் அருவி இழிவது போலக் கண்ணீர் வடித்தாள். (இராமனைக் கண்டதால்) " என் பொய்யான உலகப்பற்று அழிந்தது; அளவற்ற காலம் நான் மேற்கொண்டிருந்த தவம் பலித்தது; என் பிறவி ஒழிந்தது" என்று கூறினாள். வேண்டிய எல்லாம் கொண்டுவந்து அவள் இராம இலக்குவனுக்கு விருந்து செய்விக்க, அவர்களும் விருந்தை ஏற்றனர்.

## கிட்கிந்தா காண்டம் – நட்பு கோட்படலம்

### சுக்ரீவன்

சீதையைத் தேடிவரும் இராம இலக்குவரைக் கண்ட அனுமன், சுக்ரீவனை அழைத்து வந்தான். சுக்ரீவனை நண்பனாக ஏற்றுக் கொள்கிறான் இராமன்.

6. ***தவா வலி அரக்கர் என்னும்***
***தகா இருள் பகையைத் தள்ளி,***
***குவால் அறம் நிறுத்தற்கு ஏற்ற***
***காலத்தின் கூட்டம் ஒத்தார்***
***அவா முதல் அறுத்த சிந்தை***
***அனகனும், அரியும் வேந்தும்***
***உவா உற வந்து கூடும்***
***உடுபதி, இரவி ஒத்தார். ( 3806)***

### சொல்லும் பொருளும்

***அனகன்*** – *இராமன்;* ***உவா*** – *அமாவாசை;* ***உடுபதி*** – *சந்திரன்*

### பொருள்

குறையாத வலிமை உடையவர்களும் வேண்டாத இருள்போன்றவர்களுமாகிய பகைவர்களை அழித்து அறங்கள் அனைத்தையும் நிலைபெறச் செய்வதற்கு ஏற்ற உரிய காலம்போல் இராமனும் சுக்ரீவனும் ஒருங்கிருந்தார்கள். ஆசையை அறவே அழித்த சிந்தையான் இராமனும் வானரத் தலைவன் சுக்ரீவனும் அமாவாசைக் காலத்தில் ஒன்றாக இணைந்திருக்கிற சந்திரனையும் சூரியனையும் ஒத்து இருந்தார்கள்.

7. ***மற்று இனி உரைப்பது என்னே?***
***வானிடை மண்ணில், நின்னைச்***
***செற்றவர் என்னைச் செற்றார்;***
***தீயரே எனினும் உன்னோடு***
***உற்றவர் எனக்கும் உற்றார்; உன்***
***கிளை எனது; என் காதல்***
***சுற்றம் உன் சுற்றம்; நீ என்***
***இன் உயிர்த் துணைவன் என்றான். (3812)***

### சொல்லும் பொருளும்

**செற்றார்** – பகைவர், **கிளை** – உறவினர்

### பொருள்

இராமன் சுக்ரீவனிடம், "இனி நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது? விண்ணிலும் மண்ணிலும் உள்ள உன் பகைவர் என் பகைவர்; தீயவராக இருப்பினும் கூட உன் நண்பர்கள் என் நண்பர்கள்; உன் உறவினர் என் உறவினர்; அன்பு மிகுந்த என் சுற்றத்தினர் உன் சுற்றத்தினர்; நீ, என் இனிய உயிர் நண்பன்!" என்றான்.

## யுத்த காண்டம் – வீடணன் அடைக்கலப் படலம்

### வீடணன்

சீதையைக் கவர்ந்து வந்தது தவறென வீடணன், இராவணனிடம் கூறுகிறான். அவன் கூற்றை மதியாத இராவணன், வீடணனைக் கடிந்தான். இலங்கையை விட்டுவந்த வீடணன், இராமன் இருக்குமிடம் வந்து அடைக்கலம் வேண்டினான். இராமன் அவனை உடன்பிறந்தவனாக ஏற்று இலங்கை அரசை அவனுக்கு உரிமையாக்கினான்.

*8. ஆழியான் அவனை நோக்கி,*
*அருள்சுரந்து, உவகை கூர*
*ஏழினோடு ஏழாய் நின்ற*
*உலகும் என் பெயரும் எந் நாள்*
*வாழும் நாள், அன்றுகாறும்,*
*வாள் எயிற்று அரக்கர் வைகும்*
*தாழ்கடல் இலங்கைச் செல்வம்*
*நின்னதே, தந்தேன் என்றான். (6503)*

## பொருள்

ஆணைச்சக்கரத்தையுடைய இராமன் உள்ளத்தில் கருணை பொங்க வீடணனிடம், "ஒளிபொருந்திய பற்களை உடைய அரக்கர் வாழ்வதும் ஆழமான கடல் நடுவே உள்ளதுமான இலங்கை அரசாட்சி, ஏழேழாகிய பதினான்கு உலகங்களும் எனது பெயரும் இங்கு எவ்வளவு காலம் இருக்குமோ அவ்வளவு காலம் உனக்கே உரிமை எனக் கொடுத்தேன்" என்று கூறினான்.

*9. குகனோடும் ஐவர் ஆனேம்*
*முன்பு; பின் குன்று சூழ்வான்*
*மக னொடும் அறுவர் ஆனேம்;*
*எம்முழை அன்பின் வந்த*
*அகன் அமர் காதல் ஐய!*
*நின்னொடும் எழுவர் ஆனேம்;*
*புகல் அருங் கானம் தந்து,*
*புதல்வரால் பொலிந்தான் நுந்தை.* ( 6507)*

**பா வகை : அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**

## பொருள்

(நாங்கள் நால்வர் உடன்பிறந்தவர்களாக இருந்தோம்). குகனுடன் சேர்த்து நாங்கள் ஐவர் ஆனோம். பின்னர் மேருமலையைச் சுற்றி வரும் கதிரவனின் மகனான சுக்ரீவனுடன் அறுவர் ஆனோம். உள்ளத்தில் அன்புகொண்டு எங்களிடம் வந்த அன்பனே, உன்னுடன் சேர்த்து எழுவர் ஆனோம். புகுதற்கரிய கானக வாழ்வை மேற்கொள்ளும்படி என்னை அனுப்பிய உன் தந்தையாகிய தயரதன், இதனால் புதல்வர்களைக் கூடுதலாக அடைந்து பெருமை பெறுகிறான்.

### இலக்கணக் குறிப்பு

**உளது** – இடைக்குறை; **மாதவம்** – உரிச்சொற்றொடர்; **தாழ்கடல்** – வினைத்தொகை; **செற்றவர்** – வினையாலணையும் பெயர்; **நுந்தை** – நும் தந்தை என்பதன் மரூஉ

### உறுப்பிலக்கணம்

தந்தனன் = **தா (த) + த் (ந்) + த் + அன் + அன்**

தா – பகுதி (த எனக் குறுகியது விகாரம்); த் – சந்தி (ந் ஆனது விகாரம்); த் – இறந்தகால இடைநிலை; அன் – சாரியை; அன் – படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி.

பொலிந்தான் = **பொலி + த் (ந்) + த் + ஆன்**

பொலி – பகுதி; த் – சந்தி (ந் ஆனது விகாரம்); த் – இறந்தகால இடைநிலை; ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி

### புணர்ச்சி விதி

அருங்கானம் = **அருமை + கானம்**;
விதி : ஈறு போதல் – அரு + கானம்;
விதி : இனமிகல் – அருங்கானம்

### நூல்வெளி

கம்பராமாயணம் பல்வேறுவிதமான பண்புகளை அடிப்படையாகக் கொண்ட பாத்திரங்களால் படைக்கப்பட்டிருக்கிறது. இராமன் அனைத்து உயிர்களையும் கீழ் மேல் எனக் கருதாது சமமாக அன்பு காட்டும் பகுதிகள் பாடமாக இடம்பெற்றுள்ளன. அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், யுத்த காண்டம் ஆகியவற்றிலிருந்து குகன், சடாயு, சவரி, சுக்ரீவன், வீடணன் ஆகியோரைப் பற்றிய பாடல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. உடன்பிறப்பியப் பண்பையும் அன்பையும் வெளிப்படுத்தும் பாடல்கள் இவை. இந்நூலை இயற்றியவர் கம்பர். இதற்குக் கம்பர் இராமாவதாரம் என்னும் பெயர் சூட்டினார். கம்பனது கவிநலத்தின் காரணமாக இது "கம்பராமாயணம்" என்றே அழைக்கப்படுகிறது. கம்பரது காலம் 12ஆம் நூற்றாண்டு. எழுதப்பட்ட காலந்தொட்டு மக்கள் இலக்கியமாகப் போற்றப்படுவதற்குக் கவிச்சக்கரவர்த்தி கம்பனின் கவிநலமே காரணம்.

### கற்பவை கற்றபின்...

உங்கள் மனம் கவர்ந்த கம்பராமாயணப் பாத்திரம் எது? ஏன்? வகுப்பறையில் உரையாடுக.



XII Std Tamil Chap_03.indd 56 10-01-2020 12:44:17


விரிவானம்

பண்பாடு ௩

# உரிமைத் தாகம்

– பூமணி

CBN4R2




நிலம் சடப்பொருள் அல்ல. நிலத்தோடு பேசக்கூடிய மனிதர்கள் இன்றைக்கும் கிராமங்களில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். வருவாய் பெரிதாக வரவில்லையென்றாலும் நில உரிமை, நிலம் சார்ந்த வேளாண்மை ஆகியவற்றை ஒரு பண்பாடாகவே கொண்டிருக்கிற மனிதர்கள் இருக்கிறார்கள். நிலத்தோடு உயிர்த்தொடர்பு கொண்டிருக்கிற பண்பாடு, 'எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே' என்னும் பழம்பண்பாட்டு மரபை நினைவூட்டுகிறது. நிலத்துடனான உறவு குடும்ப உறவையும் வலுப்படுத்துகிறது.

*அந்தச் சங்கதி இதுவரைக்கும் முத்தையனுக்குத் தெரியாது. அவன் பெண்டாட்டி சொல்லித்தான் தெரியும்.*

"மேலக்காட்ல கீழத்தாருமேல நம்பிக்கக்கெரையம் எழுதியிருக்குதாமில்ல ஒங்க தம்பி."

*முற்றத்தில் எருமைச்சாணியுடன் பருத்திவிதையை ரோசி விதைப்பெட்டியில் நிரப்பிக்கொண்டிருந்தாள் மூக்கம்மா. பெட்டியை வாங்கிக் கடகத்தில் எண்ணிக் கொட்டிய முத்தையன் அவளை ஒருமாதிரியாகப் பார்த்தான். அவன் கண்ணில் கோவமும் ஆச்சரியமும் கலந்திருந்தது.*

"என்ன இப்படிச் சொல்ற."

*அவனுக்கு மனசு துருதுருத்து, சாட்டைக் கம்பை எடுத்துக் கயிறின் பிரிந்த பாகத்தைத் தொடையில் வைத்துத் திரிக்க ஆரம்பித்தான்.*

"நேத்து கோழிகூப்புட எந்திரிச்சு கஞ்சி காய்ச்சீட்ருந்தென். அப்ப புருசனும் பொண்டாட்டியும் கடுகடுன்னு பேசிக்கிட்டாக. மனக்கசப்பு போலருக்கு. மேலூரு பங்காருசாமிகிட்ட எரநூறு ரூவா வாங்கித் திருப்பிக் குடுக்கமுடியாம கடசிக்கு அந்த ஒரு குறுக்கத்தவும் நம்பிக்கக்கெரையம் எழுதிக் குடுத்துச்சாம் ஒங்க தம்பி. ஆறு மாசத்துக்குமேல ஆச்சாம் இது நடந்து. பொண்டாட்டிக்காரி சண்டையத் தொடக்கியிருக்கா."

*தொடைமயிரில் சாட்டைக்கயிறு பின்னிச் சுளீரிடவும் அவன் முகஞ்சுளித்தான்.*

*ரெண்டு வீடுகளுக்கும் நடுவிலிருந்த குறுக்குச்சுவரை வெறித்திருந்தான் அவன்.*

*மேலக்கரிசலில் ஏர்பூட்டிக் கலப்பை முக்கச் சாலடிக்கும்போது பிச்சிப் பூவாக மண்விரிந்து விழும் அழகில் அவன் மனசு லயித்தது. கம்பு விளைந்தால் தட்டையொண்ணு விரல்தண்டி வாய்க்கும். மூக்கைஅறுக்கிறமாதிரி ஒரு முழத்துக்குக் கருது வாங்கும். கருதுகளைப் பிணையல்விட்டால் அயிரைக் குஞ்சுகளாகக் களம் நிறையத் தவசம் பெருகும்.*

*மூக்கம்மா அந்த வீட்டில் காலெடுத்து வைத்துப் பதினஞ்சு வருசமாகிறது. இன்றைக்கு மூணு பிள்ளைகளுக்குத் தாய். வீட்டுக்கு வந்த நாளில் முத்தையனுக்கு மட்டும் அவள் காய்ச்சிப் போடவில்லை. அவன் தம்பி வெள்ளைச்சாமிக்கும் மாமியாருக்கும் சேர்த்தே பொங்கினாள்.*

*வெள்ளைச்சாமிக்கு அப்போது சின்ன வயசு. என்ன வேலை செய்து கொண்டிருந்தாலும் வந்து "மதனி கஞ்சி வேணும்" என்று சிணுங்குவான். அவள் அலுத்துக்கொள்ள மாட்டாள்.*

*வெள்ளைச்சாமி எளவட்டமாகி கலியாணம் முடிக்கும் வரை மூக்கம்மாளின் கைக்குள் மகனைப் போல் வளர்ந்தான். எந்த*



XII Std Tamil Chap_03.indd 57 10-01-2020 12:44:17

நேரமும் மதினியின் வாயிலிருந்து "இந்தாடா வெள்ள" தான்.

எல்லாம் கலியாணம் ஆனதுடன் சரி. அத்தனை பாசமும் அடிமனசுக்குள் அமுங்கிவிட்டது. கலியாணமாகி ஒருமாசம் வாந்தக்கமாக இருந்தான். பிறகு பெண்டாட்டி பேச்சைக் கேட்டுக்கொண்டு அண்ணனுடன் தகராறு பங்கு பாகம் சொத்துச்சொகம்... அப்பப்பா அதெல்லாம் நடக்கக் கூடாத கதை.

வெள்ளைச்சாமி தனியாக உலைவைத்த அன்றைக்குக்கூட அவள் சந்தோசமாகத் தன் கைப்பட தானியம் அளந்து கொடுத்தாள்.

முத்தையனுக்குத் தம்பிமேல் அப்படியொண்ணும் பெரிய கோவமில்லை. பங்குபாகம் பிரிக்கும்போது அவன் பேசிய வார்த்தைகளைத்தான் தாங்க முடியவில்லை.

"நீ எனக்கு அண்ணனாக்கும்."

தகப்பன் செத்த நாளிலிருந்து தோளில் சுமந்து வளர்த்த கதையெல்லாம் சொல்லிச்சொல்லித் தம்பியின் கன்னத்தில் அடித்தால்தான் மனசாறும் போலிருந்தது. அவனைஎப்போதாவது கடிந்துபேசியதுண்டுமா. வேலைக்குப் போகாமல் படுத்துக் கிடந்தால்கூட பேச்சுவாக்கில் சொல்லிவிட்டு மாட்டுப்பக்கம் போவான்.

"அடே நெலத்தக் கௌறணும்டா. அப்பத்தான் வகுறு நெறையும்."

அப்படி வளர்த்த பயல் நெஞ்சைக் கீறிவிட்டானே என்ற ஆத்திரத்தில அழுகை வந்துவிட்டது.

"ஏலே ஒனக்கு தகப்பன் மொகம் சரியாத் தெரியுமாடா. இண்ணைக்குப் பேசவந்துட்டயாக்கும். நானா அண்ணனில்ல."

அவன் படபடத்தான். கண்ணீரை அடக்கமுடியாமல் நகர்ந்துவிட்டான்.

அன்றைக்கிலிருந்து இதுவரை தம்பியுடன் முகங்கொடுத்துப் பேசியது கிடையாது. தம்பியும் ஒருசோடி மாடு, காடுகரை, வீடுவாசல் என்று குறைவில்லாமல்தான் பிழைத்தான்.

திருகைமேல் உட்கார்ந்திருந்த முத்தையன் படக்கென்று வாசல்பக்கம் வந்து எட்டிப்பார்த்தான். தம்பியின் வீடு பூட்டியிருந்தது.

"வெள்ளப்பெய எங்கயோ போயிட்டான் போலருக்கு. வீடு பூட்டிக் கெடக்குதே."

அவள் உஸ்ஸென்று இரைந்தாள்.

"மேலூருக்குத்தான் போயிருக்கும். வெதப்பு நேரமில்லையா. அவர எப்படியாச்சும் சரிக்கெட்டி வெதைக்கவேணாமா. பின்ன அவரு வந்து நின்னுக்கிட்டாக் கேவலந்தான. முந்தாநாளு சொல்லிவுட்டாராம். பணத்த எல்லாம் கெட்டச் சொல்லி. அப்படியில்லன்னா அவரு வீட்டு வெதப்பொட்டி பிஞ்சைக்கு வந்துரும்னு சொன்னாராம்.

குத்துக்குத்தாக விதையை அள்ளிக் கரிசலுக்குள் சாலுக்குச் சால் எட்டுப்போட்டு விதைப்பெட்டியில் சலோரென வீசி விதைக்கும் தனக்குப் பதிலாக இன்னொரு உருவத்தை நினைத்துப் பார்த்தாலே அவனுக்குப் புளிப்பெடுத்தது.

"கையில துட்டுல்லாமப் போயி என்ன செய்யப்போறான். அதுலவேற அவருட்ட வசமா புடியும் குடுத்தாச்சு. வெறும் வாயிட்டுச் சரிக்கெட்ட முடியுமா. அவருக்கென்ன இது பத்தோட ஒண்ணு. நமக்குச் சொல்லு. கூறுகெட்ட பெய இப்படிச் செய்வானாக்கும். இப்ப என்ன செய்றது. நம்ம கையிலயும் காத்துட்டுக் கெடையாது. பருத்தி வெத புண்ணாக்குன்னு வாங்கிப்போட்டு..."

தனது கவலையைப் பகிர்ந்துகொள்ள ஆள் தேடும் பாவனையில் மூக்கம்மாளைப் பார்த்தான். அவள் ஈரக்கையைச் சீலையில் துடைத்துவிட்டுக் காதில் கிடந்த நகைகளைக் கழற்றிக் கொண்டிருந்தாள்.

"இந்தாங்க இதக் கொண்டுபோயி வச்சு வாங்கி அவருக்குப் பணத்த அடச்சிட்டு மறுசோலி பாருங்க. அது என்னமோ சின்னப்புள்ள தெல்லு தெறிச்சமாதிரி இப்படிக் காரியம் பண்ணீருச்சு. நம்ம அதப் பாத்துட்டுச் சும்மாருக்க முடியுமா."

அவன் தலை குனிந்துகொண்டான்.

வெள்ளைச்சாமி வீடு வந்து சேர மதியமாகிவிட்டது. வந்ததும் ஒரு செம்பு தண்ணீர் குடித்துவிட்டு நடுவீட்டில் துண்டு விரித்து மல்லாக்கப் படுத்துக் கூரைமுகட்டைப் பார்த்தபடி கிடந்தான். வாசலில் உட்கார்ந்திருந்த



அவன் பெண்டாட்டி குழந்தைக்குப் பால் கொடுத்துக்கொண்டிருந்தாள்.

முத்தையனுக்குத் தம்பி வீட்டுக்குள் காலெடுத்து வைக்க மனசில்லைதான். இருந்தாலும் ஒரு வைராக்கியத்தில் புறப்பட்டான்.

"வெள்ள இருக்கானா..."

யாரிடமோ பேசுவது போல் கேட்டுக்கொண்டு வாசலுக்குள் நுழைந்தான். வெள்ளைச்சாமியின் பெண்டாட்டி எழுந்துபோய் எதிர்வீட்டுத் திண்டில் உட்கார்ந்து கொண்டாள். வாசலைத் தாண்டிப் போய் உள்ளே உட்கார்ந்தான் முத்தையன். வெள்ளைச்சாமி துண்டைச் சுருட்டி எழுந்து மூலையில் சாய்ந்தான். அண்ணனுடைய முகத்தில் முழிக்கவில்லை.

நடுச்சுவர்மேல் பின்னியிருந்த பத்துக்கால் பூச்சி வலையைப் பார்த்தபடி முத்தையன் கேட்டான்.

"என்னடா வெள்ளங்காட்டியிலிருந்து ஆளு தட்டுப்படல. ஊரு முழுக்க வெதப்பு மும்முரத்துல அலையிது. நீ பாட்டுக்கு மாட்டக் கெட்டிப் போட்டுட்டு உக்காந்துட்ருந்தா எப்படி. எங்க போயிருந்த இன்னேரவரைக்கு."

விசயத்தைத் தம்பியின் வாயிலிருந்தே வரவழைக்கணுமென்று அவனுக்கு எண்ணம். வெள்ளைச்சாமி செருமிக் கொண்டான்.

"மேலூரு பங்காருசாமிகிட்டப் போயிருந்தேன்."

"அவருட்ட என்ன சோலி."

"ஒரு எரநூறு தரணும். வாங்கி ரெண்டு வருசமாச்சு. ஆறு மாசத்துக்கு முன்னால மேலக்காட்டக் கெரையம் எழுதி வச்சேன். இப்ப அதுமேல திரும்புவாரு போலருக்கு."

வெள்ளைச்சாமியின் முகத்தில் வருத்தம் கலந்த வெட்கம் நிழலாடியது.

"அப்படியென்னடா வந்துருச்சு பாடுபடுற நெலத்த எழுதிக் குடுக்கணும்னு. நான் ஒருத்தன் கெடக்கன்ல அடுத்த வாசல்ல. சொல்றதுக்கென்ன. சரி என்ன வுடு. ஒன் மதினிகிட்டயாச்சும் சொல்லியிருக்கலாமில்ல. இண்ணைக்குக்கூட அவ சொல்லித்தான் தெரியும்.வீட்ல பொண்டாட்டிக்காரி ஒருத்திதான் பெழப்புன்னு நெனைக்காத. அண்ணன் தம்பி அக்கா தங்கச்சின்னு சுத்துலயும் நாலு இருக்கணும். அத ஒணந்துக்கோ மொதல்ல."

முத்தையனுக்குக் குரல் தழுதழுத்தது. அவன் மனசில் இப்போது கோவமில்லை. தம்பியைக் கனிவுடன் பார்த்தான்.

வெள்ளைச்சாமியின் பெண்டாட்டிக்கு இது கேட்டிருக்கணும். அவள் குழந்தையின் சிரிப்பில் கரைந்திருந்தாள்.

வெள்ளைச்சாமிக்கு வாயெழும்பவில்லை. முத்தையன் கேட்டான்.

"சரிசரி அது போகட்டும். நெலத்த அறுதியா எழுதிக்குடுத்துட்டயா இல்ல நம்பிக்கையாவா. பத்தரம் முடிச்சாரா."

"நம்பிக்கையாத்தான். வட்டிக்கீடா எழுதி வாங்குனாரு.வட்டியக்கெட்டியாச்சு.முழுப்பணமும் இப்பயே வேணுமாம். மேலூருலவச்சு எழுதுனாக. தலைய ஒட்டிக் கையெழுத்துப் போட்டேன். கொராமுனுசுதான் எழுதுனாரு."

"அம்புட்டுத்தானா. நான் என்னமோ ஏதோன்னு பயந்துட்ருந்தேன். அவரு இனியென்ன செய்வாருன்னு பாப்பொம். பெரியமனுசனாம் பெரியமனுசன். எங்கிட்ட ஒருவார்த்த சொல்லியிருக்கலாமில்ல. சே.. பெரிய மனுசங்கெல்லாம் ஊரான் சொத்துக்கு வாயப்பௌந்துக்கிட்டுத்தான் அலையுறான். ஒழச்சுத் தேடுனவுகளுக்கில்ல வலிக்குது. நம்ம ஒண்ணுக்கொண்ணு வேண்டாற புழுக்கத்த மனசில வச்சுக்கிட்டு கொத்திக் கொதறிக்கிறதுனாலதான் அவனுக்கும் தொக்காப் போகுது. நேரங்காலத்தோட மாட்டப் பத்தீட்டுப்போயி செவக்காட்ட ஒரு ஒழவு எழுப்பிப் போடு. மேலக்காட்டுக்கு வெதவித்து இருக்குதுல்ல. நாளைக்கு ரெண்டு தாரவும் வெதச்சிறலாம். நான் மேலூருவரைக்கும் போயித் திரும்புறென்."

முத்தையன் புறப்பட்டான். அவன் காதில் வெள்ளைச்சாமியின் தோரணையான குரல் கேட்டது.

"இந்தா வெருசனா கஞ்சி ஊத்து. ரெண்டு மடக்கு ஒழவடிச்சிட்டுத்தான் திரும்பணும்"

**

திருணையில் உத்திரத்தை அணைந்து பூசணிப்பழமாக உட்கார்ந்திருந்தார் மேலூரர் பங்காருசாமி. சப்பிய பனங்கொட்டையாக நரைத்திருந்த முடியை வசக்கி முடிந்த குடுமி.

"கும்புடுறென் சாமி."

தலைக்குமேல் கைகூப்பினான். சத்தம் கேட்டதும் பங்காருசாமி செனாய்த்துக்கொண்டார்.

"வாப்பா."

பெரிய ஏப்பம் போட்டார். அவன் திருணைக்குக் கீழே ஒடுங்கி உட்கார்ந்திருந்தான்.

"என்ன முத்தையன் ஆளு இந்தப்பக்கம் தட்டுப்பட மாட்டயே. புதுசா வந்தாப்புலருக்கு. என்ன சங்கதி."

பங்காருசாமி ஆச்சரியத்துடன் விசாரித்தார்.

அடிக்கடி அவரைத்தேடி ஆள் வருவார்கள். பணம் வாங்குவார்கள். கொடுப்பார்கள். எழுதிக்கொடுத்த நோட்டைத் திருப்புவார்கள். அவருக்குக் கொடவாங்கல்தான் தொழிலென்று சொல்லணும். வசமான பிடியில்லாமல் கடன் கொடுக்க மாட்டார். ஈடாக நகை கொடுத்தாலும் நிலம் கொடுத்தாலும் வட்டியை மட்டும் குறைப்பதில்லை,

"எந்தம்பி என்னமோ பாக்கி குடுக்க வேண்டியதா கேள்விப்பட்டென். அவன் ஒரு சின்னப்பெய. எனக்குத் தெரியாம நடந்து போச்சு. அதக் கணக்குப் பாத்துத் தீர்த்துக்கிறலாம்னுதான்..."

அவர் இதை எதிர்பார்க்கவில்லை. முகத்தில் வினயம் பரவியது.

"என்னப்பா இது ஒனக்கும் ஒந்தம்பிக்கும் மனக்கசப்பாச்சே. அவனுக்காக நீ வந்து நிக்கயே."

"அண்ணன் தம்பிக்குள்ள ஆயிரம் இருக்கும் சாமி. இண்ணைக்கு அடிச்சுக்கிறதுதான் நாளைக்குக் கூடிக்கிறதுதான். சிறிசுக முண்டிக்கிருச்சுன்னா நம்மதான பொறுத்துப் போக வேண்டியிருக்கு."

"அது சரிதான்.. ஆமா கையேந்தி ரூவா வாங்குனவன் வெள்ளையனாச்சே. நானூறுக்கு கெரையம் வேற இருக்குது."

நானூறு என்ற வார்த்தை மட்டும் அவன் காதைக் குடைந்தது.

"எரநூறுன்னுதான் சொன்னான். நம்பிக்கக் கெரையத்துல பிஞ்சைய எழுதியிருக்கான்போலத் தெரியிது. வட்டிவேற குடுத்துட்டானாம். அசலக் கொண்டுவந்துருக்கென். கணக்கு முடிச்சுவுடுங்க. அண்ணன் தம்பிக்குள்ள ஆரு வந்தென்ன."

அவருக்குச் சூடு கிளம்பியது.

"இந்தாப்பாஒம்பாட்டுக்குபேசீட்டேபோனா

### தெரிந்து தெளிவோம்

| | |
|---|---|
| அனயம் | – நிறைவானது |
| எச்சௌந்தவன் | – ஏழை எளியவன். |
| கீழத்தார் | – புன்செய்யின் ஒரு பகுதி |
| கெராமுனுசு | – கிராம நிர்வாக அலுவலர் |
| கொடவாங்கல் | – கொடுக்கல் வாங்கல் |
| திருணை | – திண்ணை |
| தெகஞ்சத | – முடிந்ததை |
| பிஞ்சை | – புன்செய் |
| ரோசி | – உரசுதல் |
| வாந்தக்கமாக | – இணக்கமாக |
| வெதப்பெட்டி | – விதைப்பெட்டி |
| வெள்ளங்காட்டி | – விடியற்காலை |
| வேண்டாற | – வேண்டாத |
| திருகை | – மாவு அரைக்கும் கல் |
| குறுக்கம் | – சிறிய நிலப்பரப்பு |
| கடகம் | – ஓலைப்பெட்டி |

எப்படி. ஒன்ன நான் பாத்துக்கிட்டனா வச்சனா. கடன் வாங்குனது அவன். நம்பிக்கக்கெரையம்னு ஒனக்கு அனயம் தெரியுமோ. நானூறுக்கு அறுதிக் கெரையம் எழுதியாச்சு. பிஞ்சையில வெதைக்க எறங்காதன்னு அவங்கிட்டச் சொல்லியனுப்பிட்டனே. இதுல ஒனக்கென்ன வந்துபோச்சு. அவன் நெலம் அவன் பாடு."

அவனுக்கு உடம்பு கொதித்தது. பொறுமையிழந்தான்.

"நீங்கபாத்து அப்படிச் சொல்லலாமா. ஒங்க பணத்த ஆரும் இல்லன்னு சொல்லீட்டாகளா. வாங்குன கடனத் திருப்பிக் குடுத்தா நோட்டக் கிழிச்செறியிறதுதான் மரியாத."

"அண்ணைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதுதான. இப்பமட்டும் என்ன புதுசா அக்கற வந்துருச்சு."

"இந்தப் பேச்செல்லாம் வேணாம். நல்லபடியா காரியத்த முடிச்சுட்டுப் போகலாம்னு வந்தென். முடியாது போலருக்கு. அவன் நெலம் வேற, என் நெலம் வேற இல்ல. எரநூறு வச்சிருக்கேன். கணக்க முடிச்சு நோட்டக் குடுக்கணும்னா குடுங்க. அதுக்குமேல அவரவருக்குத் தெகஞ்சதப் பாத்துக்கிற வேண்டியதுதான். எதுக்கும் ஒரு அளவு வேணாமா. நாளைக்குப் பிஞ்ச வெதப்பு நடக்கும். ஒரெட்டு வந்து பாத்துட்டுப் போங்க."

அவன் அவரைத் தைரியமாக ஏறிட்டுப் பார்த்தான். உதடு துடித்தது. அவனது பார்வையைத் தாங்க முடியாதவர் போல் அவர் முகஞ்சுளித்தார்.

வெள்ளைச்சாமியின் நிலத்தைச் சட்டப்படி சொந்தமாக்கிக் கொள்ள முடியாதென்று அவருக்குத் தெரியும். இருந்தாலும் பயமுறுத்தி இருநூறுக்கு நானூறு கழட்டிவிடலாமென்ற எண்ணம். முத்தையனின் பேச்சுவேறு கடுப்பேற்றியிருந்தது.

"அந்தளவுக்கு வந்துட்டயா. நான் தெரிஞ்சமட்டுக்கும் பாத்துக்கிறென். அதுக்குமேல வார்த்தைய வளத்துக்கிறாத. சங்கடம் வந்து சேரும்."

அவர் விருட்டென்று உள்ளே போய்விட்டார். அவரைப் பதட்டத்துடன் பார்த்துக்கொண்டிருந்தது வீட்டுக்கார அம்மா.

விறைப்பாகத் திரும்பிய முத்தையன் முணுமுணுத்தான்.

"ஆருக்குத்தான் சங்கடம் வரப்போகுதுன்னு தெரியல."

**

புரட்டாசி பிறந்துவிட்டால் போதும். ஊர்முழுக்கச் சுறுசுறுப்புத் தட்ட ஆரம்பித்துவிடும். சம்சாரிகளுக்கும் சரி கூலிக்காரர்களுக்கும் சரி, இந்த மாசம் அப்பேர்ப்பட்டது. ஏற்கெனவே எழுப்புழுவு அடித்துப் போட்டிருந்த மானம்பாரிக் கரிசல்களுக்குப் புரட்டாசி மழையால் நல்ல காலம் பிறக்கும்.

மறுநாள் வெள்ளங்காட்டி, மூலை முடுக்குகளில் முடங்கிக் கிடந்த ரெட்டைக் கலப்பைகள் கொட்டாரங்களில் ஏராளமாகத் தட்டுப்பட்டன.

கஞ்சிக்கலயம் கூடையுடன் பனைமரத்துப் பாதையில் மூக்கம்மா வந்துகொண்டிருந்தாள். அவளுக்குப் பின்னால் கையில் தூக்குவாளியுடன் சின்னவள்.

ஏர் பூட்டியாகிவிட்டது. முத்தையன் நிலத்தைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டுக் கயிற்றைப் பிடித்தான்.



XII Std Tamil Chap_03.indd 61 10-01-2020 12:44:19

பொம்பளைகள் எலந்தமுள் வெட்டுவதிலும் கல் பொறுக்கிப் போடுவதிலும் மும்முரமாக இருந்தார்கள்.

முதலில் மேலிட்டாற் போல எழுப்புழவு. அதற்குப் பிறகு பருத்தி விதைக்கணும். ரெண்டாம் உழவுக்குக் கட்டை போடாமல் கலப்பையை அமுக்கிப் பிடிக்கணும்.

வெயிலேறியது. விதைப்பு முடிந்து மாடுகள் கீழத்தாரில் சாலடித்துக் கொடுக்க பொம்பளைகள் பயத்தாம்பட்டம் போட்டார்கள்.

மேலூரர் பங்காருசாமிக்கென்னமோ அன்றைக்குக் கோயில்பட்டி போய் வக்கீலிடம் வெள்ளைச்சாமியின் நோட்டைக் கொடுத்து நோட்டீஸ் விட்டுப் பயமுறுத்தணுமென்று ஆத்திரம். பசியாறியதும் நோட்டை எடுத்து மடியில் கட்டிக்கொண்டு வேகமாகக் கிளம்பினார்.போகிறவழியில்புஞ்சையில்நின்று ஒரு அரட்டு அரட்டிவிட்டுப் போனாலாவது காரியம் பலித்துவிடாதா என்ற நினைப்பு வேறு.

பாதையில் நின்று கிழக்காமல் பார்த்தார். புஞ்சையில் உழவு நடந்தது. வேகமாகப் புஞ்சைக்கு நடந்தார்.

"ஏ... முத்தையா ஒன்னத்தாம்ப்பா.. ரெண்டு பேருக்கும் போங்காலம் வந்துருச்சா. பேசாம உண்டான ரூவாயக் கெட்டீட்டுப் பிஞ்சைய உழுங்க.கோர்ட்டுக்குப் போனாத்தான் பின்னால வலியெடுக்கும்."

மேலக்கடைசி வரப்பில் பங்காருசாமி கடுகடுப்பாக நின்று கொண்டிருந்தார்.

எல்லாரும் திடீரென்று திரும்பிப் பார்த்தார்கள். வெள்ளைச்சாமிக்குக் கோவம். மட்டியைக் கடித்துச் சாட்டைக் கம்பை மாறிப்பிடித்தான்.

"அடே நீ சும்மாருடா. அவன நான் கவனிச்சுக்கிறேன். எச்சௌத்தவன்னா தலமேல ஏறுறானே. இவனால என்ன வந்தாலுஞ் சரி."

முத்தையனுக்குத் தொடையிரண்டும் துடித்தது.

"யோவ். என்ன சொன்ன. எங்க தகப்பனுக்கு ரெண்டு புள்ளதான். இப்ப ஆருக்கு வலிக்கப்போகுதுன்னு பாக்கயா?"

அவன் ஆவேசமாகக் கத்திக்கொண்டு ஓடினான். சாட்டைக் கம்பை ஓங்கியபடி வெள்ளைச்சாமி அவனுக்குப் பின்னால் பாய்ந்தான்.

பங்காருசாமி பதறிப்போனார். சே.. காரியம் கெட்டுப் போச்சே. விவகாரம் இந்தளவுக்கு முற்றிவிட்டதே. பயல்கள் வருகிற வருத்தைப் பார்த்தால் சரியாகத் தெரியவில்லை. இனியும் நின்றால் மோசம் போய்விடும்.

மேலவரப்பைத் தாண்டிக் கரிசல்கட்டிகளுக்கிடையில் அவுந்த வேட்டியைக் கையிலேந்தியபடி தொபுக்தொபுக்கென்று மேலூரரை நோக்கி ஓட ஆரம்பித்தார் அவர்.

### நூல்வெளி

'உரிமைத்தாகம்' என்னும் இச்சிறுகதை 'பூமணி சிறுகதைகள்' என்னும் தொகுப்பில் உள்ளது. பூமணி, கரிசல் எழுத்தாளர்களில் ஒருவர். பூ. மாணிக்கவாசகர் என்ற தனது பெயரைச் சுருக்கிப் பூமணி என்ற பெயரில் எழுதி வருகிறார். தமிழ்நாடு அரசின் கூட்டுறவுத்துறையில் துணைப்பதிவாளராகப் பணியாற்றியவர். அறுப்பு, வயிறுகள், ரீதி, நொறுங்கல்கள் ஆகியன இவரது சிறுகதைத் தொகுப்புகள். வெக்கை, பிறகு, அஞ்ஞாடி, கொம்மை உள்ளிட்ட புதினங்களை எழுதியுள்ளார். கருவேலம்பூக்கள் என்ற திரைப்படத்தை இயக்கியுள்ளார். அஞ்ஞாடி என்னும் புதினத்திற்காக 2014இல் சாகித்திய அகாதெமி விருது பெற்றுள்ளார்.

### கற்பவை கற்றபின்...

1. 'நமது நிலமே நமது அடையாளம்' – இக்கூற்றை விவாதிக்க.
2. வாழ்க்கை முன்னேற்றத்திற்கு உறவினர்களின் பங்கு முக்கியமானது என்பதைக் குறித்துப் பேசுக.

## பொருள் மயக்கம்

D6FXS2

தமிழ்மொழியை எழுதும்போதும் படிக்கும்போதும் பேசும்போதும் கடைப்பிடிக்க வேண்டிய முறைகள் சில உள்ளன. அவற்றைப் பின்பற்றினால் மாணவர்கள் பொருள்மயக்கம் இல்லாமல் மொழிப்புலமை பெறுவர்.

எழுதும்போதோ பேசும்போதோ தேவையான இடங்களில் இடைவெளி விடாததும் தேவையற்ற இடங்களில் இடைவெளி விடுவதும் படிப்போர்க்கும் கேட்போருக்கும் பொருள் குழப்பத்தை ஏற்படுத்திவிடும்.

### இடைவெளியும் பொருள் வேறுபாடும்

| | |
|---|---|
| எம் மொழி யார்க்கும் எளிது | எம்மொழியார்க்கும் எளிது |
| அப் பாவின் நலங் காண்க | அப்பாவின் நலங்காண்க |
| ஐந்து மாடிவீடு | ஐந்துமாடி வீடு |
| அன்றுமுதல் பாடம் கற்றோம் | அன்று முதல்பாடம் கற்றோம் |

இவ்வாறு சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் எழுதுவதால் பொருள் மாறுபாடுகள் ஏற்படுகின்றன.

### வல்லின மெய்களும் பொருள் வேறுபாடும்

| | |
|---|---|
| பிட்டுத் தின்றான் | பிட்டு தின்றான் |
| உள்ளக் கருத்து | உள்ள கருத்து |
| ஈட்டிக் கொண்டு வந்தான் | ஈட்டி கொண்டு வந்தான் |

போன்ற தொடர்களில் வல்லின மெய்களால் ஏற்படும் பொருள் வேறுபாடுகளை அறிந்து பயன்படுத்த வேண்டும்.

### காற்புள்ளியும் பொருள் மயக்கமும்

இயல்பாக உரையாடும்போது பொருள்நிலையில் பெரும்பாலும் எந்தக் குழப்பமும் ஏற்படுவதில்லை. குரலில் ஏற்றம் – இறக்கம், சொற்களில் அழுத்தம் – குழைவு, இறுதிச் சொல் மூலம் வினாவா உணர்ச்சியா என்பதையெல்லாம் உணர்ந்து பொருளை நாம் சரியாக விளங்கிக் கொள்கிறோம். ஆனால் எழுதும்போது காற்புள்ளியிடாமல் எழுதினாலோ இடம் மாற்றிக் காற்புள்ளி இட்டாலோ தொடரில் உள்ள சொற்கள், அத்தொடருக்குரிய முழுமையான பொருளைத் தராமல் வேறுபொருளைத் தந்துவிடும்.

**அவள், அக்காள் வீட்டிற்குச் சென்றாள்.**

இப்படிக் காற்புள்ளியிட்டு எழுதும்போது அந்தப் பெண் தன் அக்காள் வீட்டிற்குச் சென்றாள் எனப் பொருள்படுகிறது,

**அவள் அக்காள், வீட்டிற்குச் சென்றாள்.**

இத்தொடரில் அந்தப் பெண்ணின் அக்காள் தனது வீட்டிற்குச் சென்றாள் எனப் பொருள்வேறுபடுவதை அறியலாம்.

எனவே, நிறுத்தக்குறிகளை உரிய இடங்களில் இட்டும் இடாமலும் எழுதிப் பொருள்மயக்கம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

### இடைச்சொற்களும் விகுதிகளும் சொல்லுருபுகளும்

தமிழில் உள்ள சில இடைச்சொற்கள், சொல்லுருபுகள், விகுதிகள் ஆகியவற்றைத் தொடர்களில், சொற்களில் சேர்த்தும் பிரித்தும் எழுதுவதால் பொருள் வேறுபாடு தோன்றுகிறது.

**விடும்**

*தன் தவற்றினை உணர்ந்துவிடுவானாயின் நன்று*

*தன் தவற்றினை உணர்ந்து விடுவானாயின் நன்று*

**தன்**

*பாண்டியன்தன் கவிதையைப் படித்தான்*

*பாண்டியன் தன் கவிதையைப் படித்தான்*

**தான்**

*கண்ணன்தான் எழுதுவதாகச் சொன்னான்*

*கண்ணன் தான் எழுதுவதாகச் சொன்னான்.*

**பற்றி**

*குகன் இராமனைப்பற்றிக் கூறினான்*

*குகன் இராமனைப் பற்றிக் கூறினான்*

**முன்**

*சில குறைகளை மக்கள் முன்வைத்தனர்*

*சில குறைகளை மக்கள்முன் வைத்தனர்*

**முதல்**

*அன்றுமுதல் அமைச்சர் வந்தார்*

*அன்று முதல்அமைச்சர் வந்தார்*

**பால்**

*அவன்பால் கொண்டு சென்றான்*

*அவன் பால்கொண்டு சென்றான்*

**கண்**

*அவன்கண் பெற்று மகிழ்ந்தான்*

*அவன் கண்பெற்று மகிழ்ந்தான்*

**படி**

*அளக்கும்படி வேண்டினான்*

*அளக்கும் படி வேண்டினான்*

**மூலம்**

*அதன்மூலம் கண்டுபிடிக்கப்பட்டது*

*அதன் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது*

**கூட**

*அவன்கூடக் கொடுத்தான்*

*அவன் கூடக் கொடுத்தான்*

### சொல்லுருபுகள்

***வீட்டிலிருந்து சென்றான் – வீட்டில் இருந்து சென்றான்***

*இத்தொடரில் அமைந்துள்ள **வீட்டிலிருந்து** என்ற சொல்லைச் சேர்த்தும் பிரித்தும் எழுதும்போது இருவேறு பொருள் உணர்த்துவதைக் காணலாம்.*

### சொற்களை மாற்றி எழுதும்போது ஏற்படும் பொருட்குழப்பம்

*தொடர்கள் அமைக்கும்போது தேர்ந்தெடுத்த சொற்களையும் சொற்களுக்குரிய தெளிவான பொருளையும் தொடரமைப்பு மாறாமல் அமைத்தல் வேண்டும்.*

***"ஆண்டுதோறும் மறைந்த தி.ஜானகிராமன் நினைவாகக் கூட்டம் நடைபெறும்"***

*இத்தொடரில் உள்ள பொருட்பிழையை அறிய முடிகிறதா? தி. ஜானகிராமன் ஆண்டுதோறும் மறைந்தார் என்னும் தவறான பொருள் அமையும்படி வந்துள்ளது.*

***"மறைந்த தி.ஜானகிராமன் நினைவாக ஆண்டுதோறும் கூட்டம் நடைபெறும்"***

*என்றே அமைந்திருத்தல் வேண்டும்.*

*ஒவ்வொரு தொடரிலும் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகியவை அமைந்திருக்கும். சில தொடர்களில் எழுவாய் மறைந்து வருவதும் உண்டு. கீழ்க்காணும் இத்தொடர்களைப் புரிந்துகொள்ள முடிகிறதா?*

***இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் பணிவிடை செய்யப் புறப்பட்டான்.***

***பணிவிடை செய்ய இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்.***

***காட்டில் இராமனுக்குப் பணிவிடை செய்ய இலக்குவனும் புறப்பட்டான்.***

***இராமனுக்குப் பணிவிடை செய்ய இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்***

*இத்தொடர்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருளைத் தருகின்றன. நான்காம் தொடர் தவிர்த்துப் பிற தொடர்கள் உணர்த்தும் பொருள் முழுமையாக வெளிப்படவில்லை.*

*முதல் தொடர் 'காட்டிற்குப் பணிவிடை செய்ய இராமனுடன் இலக்குவனும்*



XII Std Tamil Chap_03.indd 64 10-01-2020 12:44:19

சென்றான்' என்னும் பொருளையும் இரண்டாம் தொடர் 'யாரோ ஒருவருக்குப் பணிவிடை செய்ய இராமனுடன் இலக்குவனும் சென்றான்' என்னும் பொருளையும் மூன்றாம் தொடர் 'காட்டில் உள்ள இராமனுக்குப் பணிவிடை செய்ய இலக்குவனும் புறப்பட்டான்' என்னும் பொருளையும் தருகின்றன.

### நினைவில் கொள்ள வேண்டியவை

1. பண்புத்தொகை, வினைத்தொகையாக வரும் சொற்கள் ஒருசொல் என்னும் தன்மை கொண்டவை. எனவே அவற்றைப் பிரித்து எழுதக் கூடாது.

   செங்கடல் (சரி) – செங் கடல் ( தவறு )

   கத்துகடல் (சரி) – கத்து கடல் ( தவறு )

2. பெயர்ச்சொல் வினைச்சொல் ஆகியவற்றிற்கு இடையில் நின்று பொருளைத் தெளிவாக உணர்த்தி நிற்கும் **இடைச்சொற்களைச் சேர்த்து எழுத** வேண்டும்.

   அணங்கு**கொல்** (சரி) அணங்கு கொல் (தவறு)

3. **இடைச்சொல்லுடன்** சொற்களைச் சேர்த்தே எழுத வேண்டும்.

   பேசிய**படி** பணம் கொடுத்தான் ( பேசியவாறு )

   பேசிய படி பணம் கொடுத்தான் ( படியளவு )

4. உடம்படுமெய்கள் அமைந்த சொற்களில் **உடம்படுமெய்**களைச் சேர்த்துத்தான் எழுத வேண்டும்.

   மணி**ய**டித்துச் சென்றான் (ஒலி எழுப்புதல் )

   மணி அடித்துச் சென்றான் (மணி என்பவன் யாரையோ அறைதல்)

5. பன்மையை உணர்த்தும் '**கள்**' விகுதி சேர்ந்த சொற்களைப் பிரிக்காமல் எழுத வேண்டும்.

   ஈ**க்கள்** மொய்த்தன – ஈக் கள் மொய்த்தன

   குரங்கு**கள்** உண்டன – குரங்கு கள் உண்டன

6. இரட்டைக்கிளவிச் சொற்களைச் சேர்த்து எழுத வேண்டும்

   படபடவெனச் சிறகை அடித்தது (சரி)

   பட பட எனச் சிறகை அடித்தது (தவறு)

7. சொற்புணர்ச்சியில் நிலைமொழியின் ஈற்றெழுத்து மெய்யெழுத்தாகவும் வருமொழி முதலெழுத்து உயிரெழுத்தாகவும் இருந்தால் அவற்றைச் சேர்த்தே எழுத வேண்டும்.

   சுடராழி – சுடர் + ஆழி

8. உரிச்சொற்களைப் பெயருடனும் வினையுடனும் பயன்படுத்தும்போது சேர்த்தே எழுத வேண்டும்.

   கடிமணம் – கடி மணம்

9. உம்மைத்தொகைச் சொற்களையும் நேரிணைச் சொற்களையும் எதிரிணைச் சொற்களையும் சேர்த்தே எழுத வேண்டும்.

   உற்றாருறவினர் ( சரி ) – உம்மைத்தொகை

   உற்றார் உறவினர் ( தவறு )

   சீரும்சிறப்பும் ( சரி ) – நேரிணைச்சொற்கள்

   சீரும் சிறப்பும் ( தவறு )

   மேடுபள்ளம் ( சரி ) – எதிரிணைச்சொற்கள்

   மேடு பள்ளம் ( தவறு )

### சொற்றொடர்ப்பிழை

திணை, பால், எண், இடம், காலம் முதலிய பிழைகள் ஏற்படாவண்ணம் தொடர் எழுதப் பழகுதல் சாலச்சிறந்தது. கீழுள்ள தொடர்கள் பிழையானவை அல்லவா? சிந்தியுங்கள்.

- கோவலன் மதுரைக்குச் சென்றது.
- பறவைகள் நெல்மணிகளை வேகமாக் கொத்தித் தின்றது.
- குதிரையும் யானையும் வேகமாக ஓடியது.
- அவன் வெண்மதியிடம் பேசினாய்.
- சென்னையிலிருந்து நேற்று வருகிறான்.

அல்லன், அல்லள், அல்லர், அன்று, அல்ல என்பனவற்றைத் திணை, பால் எண், இடம் அறிந்து ஆளுதல் வேண்டும். (அவன் அல்லன், அவள் அல்லள், அவர் அல்லர், நாய் அன்று, நாய்கள் அல்ல)

அது என்னும் வேற்றுமை உருபு அஃறிணைக்கு உரியது. வரும் சொல் உயர்திணையாயின் அது என்னும் உருபினைப் பயன்படுத்துதல் கூடாது. எனது வீடு, அரசரது மாளிகை என்று எழுதலாம். ஆனால், எனது மனைவி, அரசரது மகன் என்றெழுதுதல் பிழை (மனைவி, மகன் – உயர்திணை).

தொடர் எவ்விதக் குழப்பமும் இல்லாமல் அமைக்கப்படவேண்டும். இரண்டாவது குழந்தையிடம் கேள்வி கேட்டான் / குழந்தையிடம் இரண்டாவது கேள்வி கேட்டான். முதலிரண்டு சொற்கள் இடம் மாறியதால் தொடருக்கான பொருள் மாறுகிறது. அவன் அருகில் இருந்தான் / அவன் அருகாமையில் இருந்தான். அருகில் என்பதற்கு எதிர்ச்சொல் அருகாமை. இவ்வேறுபாடு தெரியாவிடின் தொடரின் பொருள் மாறிவிடும்.

பேருந்து மோதி மிதிவண்டியில் சென்றவர் காயம் என்னும் தொடரும் பிழையானது. பேருந்து மோதியா மிதிவண்டியில் சென்றார்? மிதிவண்டியில் சென்றவர் பேருந்து மோதி காயம் என்று எழுதவேண்டும்.

### பொதுவான பிழைகள்

சுடுதண்ணீர் என்று எழுதுவதும் பிழையே. தண்ணீர் – குளிர்ந்த நீர். சூடும் குளிருமாக நீர் எப்படி இருக்கமுடியும்? நடுசென்டரில் நின்றான் – நடு என்பது தமிழ். சென்டர் என்பது ஆங்கிலம். இரண்டிற்கும் ஒரே பொருள். நடுவில் நின்றான் என்று எழுதினாலே போதும்.

ஒரு வரியின் இறுதியிலுள்ள சொல்லைப் பிரித்து எழுதுவதாக இருந்தால் பொருள் கெடாதபடி பிரிக்கவேண்டும். நம்பியார் கூடச் சென்றார் என்பதற்கும், நம்பி யார் கூடச் சென்றார் என்பதற்கும் பொருள் வேறுபாடு உண்டு.

வினைத்தொகைச் சொல்லுக்கிடையில் வல்லினம் மிகக்கூடாது.

| சரி | தவறு |
|---|---|
| **திருவளர்செல்வன் / செல்வி** | **திருவளர்ச்செல்வன் / செல்வி** |
| **திருநிறைசெல்வன் / செல்வி** | **திருநிறைச்செல்வன் / செல்வி** |

### பிழை தவிர்க்கச் சில குறிப்புகள்

- ஒருவர் சொல்லச் சொல்லக் கேட்டு எழுதிப் பழகுதலும் உதவும்.
- சொல்லுக்கான பொருளை நினைவில் கொள்ளுதல் சிறந்த பயிற்சியாகும்.
- மரபுச்சொற்களைக் கற்றல் இன்றியமையாத ஒன்றாகும். (யானை – கன்று; குதிரை – கனைக்கும்)
- இலக்கண விதிகளை மனத்துள் பதித்து வைப்பதும் நமது கடமை.
- எழுதியதை மீளப் படித்துப் பார்த்துப் பிழையிருப்பின் திருத்துதலும் கடமையாகும்.

**கற்பவை கற்றபின்...**



தொடர்களைப் பொருள் மயக்கமின்றி எழுத வழிகாட்டும் உரைநடை நெறிகளைப் பின்பற்றி ஐந்து தொடர்களை எழுதுக.



XII Std Tamil Chap_03.indd 66 10-01-2020 12:44:20

## இலக்கணத் தேர்ச்சிகொள்

1. பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க.

   அ) தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல்.

   ஆ) தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டு எழுதுதல்

   இ) நிறுத்தக்குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்

   ஈ) வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல்

2. வல்லினம் மிகும், மிகாத் தொடர்களின் பொருளறிந்து பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ) பாலை பாடினான் | – | 1) தேரை என்னும் உயிரினத்தைப் பார்த்தான். |
| ஆ) பாலைப் பாடினான் | – | 2) தேரினைப் பார்த்தான் |
| இ) தேரை பார்த்தான் | – | 3) பாலினைப் பாடினான் |
| ஈ) தேரைப் பார்த்தான் | – | 4) பாலைத் திணை பாடினான் |

   (அ) 4, 1, 3, 2 (ஆ) 2, 3, 1, 4 (இ) 4, 3, 1, 2 (ஈ) 2, 4, 1, 3

3. வேறொரு பொருள் அமையுமாறு சொற்களைச் சேர்த்துத் தொடரமைக்க.
   மாணவர்கள் வரிசையில் நின்று அறிவியல் கண்காட்சியைக் கண்டனர்.

4. கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.

   (எ.கா.)

   அவன் முன்வந்து கூறினான்

   முன் <

   அவன்முன் வந்து கூறினான்

   தானே <

   கொண்டு <

   விட்டான் <

5. காற்புள்ளி இடாமல் எழுதுவதனால் ஏற்படும் பொருள்மயக்கத்திற்குச் சான்று தருக.

6. சல சல, வந்து வந்து, கல கல, விம்மி விம்மி, இவற்றில் இரட்டைக் கிளவித் தொடர்களை எழுதி, அவற்றை எழுதும் முறையைக் கூறுக.

7. திருவளர்ச்செல்வன், திருவளர் செல்வன் – இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?



XII Std Tamil Chap_03.indd 67 10-01-2020 12:44:20

## நம்மை அளப்போம்

DKYSTD

**பலவுள் தெரிக.**

1. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை ..................

   அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்
   இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்

2. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

   அ) உரிமைத்தாகம் – 1. பாரசீகக் கவிஞர் ஆ) அஞ்ஞாடி – 2. பூமணி
   இ) ஜலாலுத்தீன் ரூமி – 3. பகதவச்சல பாரதி ஈ) தமிழர் குடும்ப முறை – 4. சாகித்திய அகாதெமி

   அ) 2, 4, 3, 1 ஆ) 3, 4, 1, 2 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1

3. இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது

   அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்

4. "உவா உற வந்து கூடும்
   உடுபதி, இரவி ஒத்தார்" – யார் யார்?

   அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன் இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி

5. "எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே – ஒரு
   சக்தி பிறக்குது மூச்சினிலே" – என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது

   அ. தனிக்குடும்ப முறை ஆ. விரிந்த குடும்ப முறை
   இ. தாய்வழிச் சமூகமுறை ஈ. தந்தைவழிச் சமூகமுறை

**குறுவினா**

1. புக்கில், தன்மனை – சிறு குறிப்பு எழுதுக.
2. நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?
3. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?
4. 'துன்பு உளது எனின் அன்றோ சுகம் உளது' என்ற இராமனின் கூற்று பின்வரும் இரு பழமொழிகளில் எதற்குப் பொருந்தும்?

   அ. நிழலின் அருமை வெயிலில் தெரியும் ஆ. சிறு துரும்பும் பல்குத்த உதவும்
5. சங்ககாலத்தில் தாய்வழிச் சமூகமுறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?

**சிறுவினா**

1. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் - விளக்கம் எழுதுக.
2. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.
3. "வருபவர் எவராயினும்
   நன்றி செலுத்து" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
4. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?
5. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.



XII Std Tamil Chap_03.indd 68 10-01-2020 12:44:20

### நெடுவினா

1. குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது – எவ்வாறு? விளக்குக.
2. பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.
3. 'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால்…… கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.

## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம்


பரிதிமாற் கலைஞர்
(1870 – 1903)

வகுப்பறையில் பாடம் நடத்திக் கொண்டிருந்தார் பேராசிரியர். பாடத்தில் மனம் ஒட்டாது கவனமின்றி இருந்த மாணவர் ஒருவரிடம், "நமது சொற்பொழிவைப் பொருட்படுத்த விரும்பாத நீ இங்கிருந்து எழுவாய், நீ இங்கிருப்பதால் உனக்கோ பிறர்க்கோ பயனிலை, இங்கிருந்து உன்னால் செயப்படுபொருள் இல்லை, ஆதலால் வகுப்பில் இருந்து வெளியேறுக" என நயம்பட உரைத்து வெளியேற்றினார். அவர்தான் 'திராவிட சாஸ்திரி' என்று சி.வை. தாமோதரனாரால் போற்றப்பட்ட பரிதிமாற் கலைஞர். அவர் தந்தையாரிடம் வடமொழியையும் மகாவித்துவான் சபாபதியாரிடம் தமிழும் பயின்றார்; எப்.ஏ (F.A – First Examination in Arts) தேர்வில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்று பாஸ்கர சேதுபதி மன்னரிடம் உதவித்தொகை பெற்றார். சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் பி.ஏ பயின்று, தமிழிலும் வேதாந்த தத்துவ சாத்திரத்திலும் பல்கலைக்கழக அளவில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றுத் தங்கப் பதக்கத்தைப் பரிசாகப் பெற்றார். 1893ஆம் ஆண்டு சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் உதவித் தமிழாசிரியராகப் பணியாற்றத் தொடங்கி, பின்பு தலைமைத் தமிழாசிரியராகப் பதவி உயர்வு பெற்றார்.

ரூபாவதி, கலாவதி ஆகிய நாடக நூல்களையும் களவழி நாற்பது நூலைத் தழுவி மான விஜயம் என்னும் நூலையும் இயற்றியுள்ளார். ஆங்கில நாடக இலக்கணத்தை அடிப்படையாகக்கொண்டு நாடகவியல் என்னும் நாடக இலக்கண நூலையும் இயற்றினார். இவரது தனிப்பாசுரத் தொகை என்னும் நூல் ஜி.யு.போப் அவர்களால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. மு.சி.பூர்ணலிங்கனாருடன் இணைந்து இவர் நடத்திய ஞானபோதினி அக்காலத்தில் குறிப்பிடத்தகுந்த அறிவியல் இதழாகத் திகழ்ந்தது. தமிழை உயர்தனிச் செம்மொழி என்று தன் பேச்சின்மூலம் முதன்முதலில் மெய்ப்பித்தவர் இவரே. பின்னாளில் 2004ஆம் ஆண்டு நடுவண் அரசு தமிழ்மொழியை உயர்தனிச் செம்மொழியாக அறிவித்தது. பெற்றோர் தனக்கு இட்ட பெயரான சூரியநாராயண சாஸ்திரி என்ற வடமொழிப் பெயரைத் தமிழில் பரிதிமாற் கலைஞர் என்று பெயர்மாற்றம் செய்து கொண்டார். தமிழ், தமிழர் முன்னேற்றம் பற்றிச் சிந்தித்துச் செயலாற்றுவதைத் தம் வாழ்நாள் கடமையாகக் கொண்டிருந்த இவர் தம் 33ஆவது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

தமிழைச் செம்மொழியென்று நிறுவி, அவர் எழுதிய கட்டுரையின் கீழ்வரும் சில வரிகள் அவருடைய உரைநடை ஆற்றலைத் தெரிவிக்கும்.

*உயர்தனிச் செம்மொழி' என்னும் கட்டுரையிலிருந்து*

"பலமொழிகட்குத் தலைமையும், மிக்க மேதமையும் உடைய மொழி, உயர்மொழி, தனித்து இயங்க வல்ல ஆற்றல் சார்ந்தது தனிமொழி. திருந்திய பண்பும், சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி செம்மொழி. ஆயின் தமிழ் உயர் தனிச் செம்மொழியாம். "



XII Std Tamil Chap_03.indd 69 10-01-2020 12:44:20

**தமிழாக்கம் தருக.**

*In terms of human development objectives, education is an end in itself, not just a means to an end. Education is a basic human right. It is also the key which opens many economic, social and political doors for people. It increases access to income and employment opportunities. While economists generally analyse the importance of education largely as a means for better opportunities in life-and that is the main theme of this chapter-let it be clearly stated that educating people is a worthy goal in itself, irrespective of the economic rates of return.*

*In terms of human development objectives, education is an end in itself, not just a means to an end. Education is a basic human right. It is also the key which opens many economic, social and political doors for people. It increases access to income and employment opportunities. While economists generally analyse the importance of education largely as a means for better opportunities in life. Educating people is a worthy goal in itself, irrespective of the economic rates of return.*

**இலக்கிய நயம் பாராட்டுக.**

*பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளி*
*பிறமொழிக்கு சிறப்பளித்த பிழையை நீக்க*
*ஊற்றெடுத்தே அன்புரையால் உலுங்க வைத்திவ்*
*உலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ?*
*கற்றுணர்ந்தே அதன்இனிமை காண்பாய் என்று*
*கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்*
*தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்து விட்ட*
*தெய்வக்கவி பாரதிஓர் ஆசான் திண்ணம்.*

*– நாமக்கல் கவிஞர்*

**கவிதையைப் படித்தபின், அக்கவிதை கிளர்த்தும் உணர்வுகள் குறித்து விழிப்புணர்வு உரை ஒன்றை எழுதுக.**

*எங்களுக்கும் ஓர் ஆறுண்டு*
*வெறுமணல் பரப்பாய் விரிந்துகிடக்க*
*ஓணான்கள் முட்டையிட*
*கள்ளிகள் பிழைத்திருக்க*
*பிள்ளைகள் விளையாட*
*பன்றிகள் மேய்ந்திருக்க*
*வானத்தில் மேகமுண்டு*
*சூரியனில் மழையுண்டு*
*காகமோ குருவியோ*
*நிழல் ஒதுங்க*
*ஆறெங்கும் முள்மரமுண்டு*
*எங்களுக்கும் ஓர் ஆறுண்டு*
*ஆற்றுக்கோர் ஊருண்டு*
*ஊருக்கோர் சனமுண்டு*
*வாழ்வைப்போல் ஒன்றுண்டு.*

*– இளங்கோ கிருஷ்ணன்*

**வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

1. *என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீதுதான்; அவர்கள் எல்லா பிரச்சினைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள்.*
2. *எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறி செல்வதனை கண்டு ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையின்றி துன்புறுவாய். நிறைய தன்னம்பிக்கை கொள்.*
3. *நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தை பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும்பொழுது கூர்ந்தக் கவனம் அறிவை பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை தேவையாகும்.*



XII Std Tamil Chap_03.indd 70 10-01-2020 12:44:20

4. மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்புக் கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.

5. ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்துக் கொண்டு, அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்.

**கீழ்க்காணும் பகுதியைப் படித்து அறிவிப்புப் பலகைக்கான செய்தியை உருவாக்குக.**

**வேர்களை விழுதுகள் சந்திக்கும் விழா, மே – 5, 2019**

**திருச்சிராப்பள்ளி**

வேலை காரணமாக வெளிநாடுகளில் பிரிந்து வாழும் உறவினர்கள் இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு சந்திக்கும் நிகழ்வு நடைபெற உள்ளது.

திருச்சி உறையூர் அன்பு நகரில் வசிக்கும் தங்கவேல் – பொன்னம்மாள் இணையரின் மூன்று தலைமுறை வழித்தோன்றல்கள் சந்திக்கும் நிகழ்வு மே–5 ஆம் தேதி இனிதே நடைபெற உள்ளது.

உறவினர் கூட்டத்தில் தங்கவேல் – பொன்னம்மாள் அவர்களின் மகன்கள், மகள்கள், பேரன்கள், பேத்திகள், கொள்ளுப் பேரன்கள், கொள்ளுப் பேத்திகள் சந்தித்துப் பெரியோர்களிடம் வாழ்த்துப் பெறுகிறார்கள். இந்நிகழ்ச்சியைத் தங்கவேல் அவர்களின் கொள்ளுப் பேத்தி செல்வி கண்மணி அவர்கள் ஒருங்கிணைக்கிறார்.

## மொழியோடு விளையாடு

**பட்டிமன்றம்**

**தலைப்பு : தனி மனித வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுபவர்கள் உறவினர்களா? நண்பர்களா?**

**சுழி குளம்**

*நவமதி மேவிடவே*
*வசிகுற ளுடனட*
*மகுடன ருளடவி*
*திறனறி வருளுமே!*




**விளக்கம்:**


புதிய ஒளிமிக்க அறிவினைப் பெற வேண்டுமென்றால், அறிவுச்சுரங்கமாக விளங்கும் திருக்குறளைக் கற்று அதன்வழி வாழ்க்கையை மேற்கொள்வாய்! மேலும், சிறந்த தலைவர்களின் வாழ்த்துகளையும் பெற்றுத் திறன்மிக்க பல்துறை அறிவினையும் பெறலாம்.

நவ மதி – புதுமையான ஒளிமயமான அறிவு

வசி – உயர்ந்த; மகுடன் – தலைவன்

அடவி – பெருகுதல்

*பொதுமதி பலமேவு*
*துணிதரம் தரமே*
*மததவிர முதல*
*திரவிய நிரம்ப*




**விளக்கம்:**

பல துறைகளிலும் பொது அறிவை வளர்த்துக்கொள். அது நல்லதொரு துணிச்சலைத் தரும். முனைப்பு தவிர்ந்தால் முதன்மைப்படுத்தப்படுவாய். செல்வமும் நிரம்பும்.


மத(ம்) தவிர – முனைப்பு நீங்க

திரவியம் – செல்வம்



XII Std Tamil Chap_03.indd 71 10-01-2020 12:44:20

### எண்ணங்களை எழுத்தாக்குக



### பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக

**எ. கா.** குமரன் வீடு பார்த்தேன் – குமரனை வீட்டில் பார்த்தேன்

1. மாறன் பேச்சுத்திறன் யார் வெல்ல முடியும்
2. போட்டி வெற்றி பெற்றது கலைச்செல்வி பாராட்டுகள் குவிந்தன.
3. காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்.
4. அனைவர் அன்பு அழைத்தவன் துன்பம் தர யார் மனம் வரும்.
5. சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்.

### செய்து கற்போம்

உங்கள் குடும்ப உறவு வழிமுறைகளைக் கொண்டு குடும்ப மரம் (Family tree) வரைக

### நிற்க அதற்குத் தக

| சூழல் | தவிர்க்க வேண்டிய ஆடம்பரச் செலவுகள் என நீவிர் கருதுவனவற்றைப் பட்டியலிடுக | பொறுப்புள்ள மகனாக/ மகளாக உங்கள் பெற்றோர்க்கு என்னென்ன உதவிகள் செய்வீர்கள்? |
|---|---|---|
| உங்கள் பெற்றோர், வேலைக்குச் செல்பவர்கள். அவர்களின் மாத ஊதியம் குடும்பச் செலவிற்கும் படிப்புச் செலவிற்கும் தாத்தா பாட்டியைக் கவனித்துக் கொள்வதற்கும் மட்டும் போதுமானதாக உள்ளது. இச்சூழலில் பொறுப்புள்ள ஒரு மகனாக / மகளாகப் பெற்றோர்க்கு நீங்கள் எவ்வாறு உதவுவீர்கள்? | | |

### படிப்போம் பயன்படுத்துவோம் (உணவகம்)

*Lobby* – ஒய்வறை

*Checkout* – வெளியேறுதல்

*Tips* – சிற்றீகை

*Mini meals* – சிற்றுணவு

### அறிவை விரிவு செய்

- கம்பர் யார்? – வ.சுப. மாணிக்கம்
- சக்கரவர்த்தி திருமகன் – இராஜாஜி
- ஜலாலுத்தீன் ரூமியின் கவிதைகள்
- வயிறுகள் – பூமணி (சிறுகதைத் தொகுப்பு)
- சிறை – அனுராதா ரமணன்
- ஒரு புளிய மரத்தின் கதை – சுந்தர ராமசாமி

### இணையத்தில் காண்க

https://www.tamiluniv/tamil/வெளியீடுகள்-2/நூல்கள்-2/சமூகவியல்/சமகாலத்-தமிழர்களின்-உறவு/

http://kambaramayanam-thanjavooraan.blogspot.com/2010/05/3_17.html

https://ilakkiyam.com/thirukural (திருக்குறள்)



XII Std Tamil Chap_03.indd 72 10-01-2020 12:44:21